விலை ரூபா 1—25

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 தை 29 ஜ- அவ் 20 இதழ் 1
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11-2-1985

# தனிநாடு கோரிக்கையை கூட்டணி கைவிடவில்லை!

## 'இந்து' பத்திரிகைக்கு 'சிவா' பேட்டி

(சென்னை)

இலங்கைத் தமிழ் மக்கள் தற்போது எத்தனை கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவித்தாலும் 'தமிழ் ஈழம்' அமைக்கும் முயற்சியில் அவர்கள் தொடர்ந்தும் முழு மூச்சுடன் செயற்படுவார்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாவது;

இலங்கை அரசாங்கத்துடன் பயனில்லாத பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு கோரிக்கையில் இருந்து விலக முடியாது.

''இலங்கை அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்னையை அரசியல் ரீதியில் தீர்த்து வைப்பதற்கு விரும்பவில்லை. மாறாக இராணுவ ரீதியான தீர்வொன்றைக்காண்பதற்கே விரும்புகிறது.

''பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் ஏராளமான தமிழ் மக்களை இராணுவத்தினர் கொலை செய்து வருகின்றார்கள். தமிழ் மக்களை இராணுவ அடக்குமுறையால் பணிய வைப்பதே இலங்கை அரசின் நோக்கமாகும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## பலர் கைது வீடுசேதம்

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி, மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் நேற்று தேடுதல் நடைபெற்றதாகவும் பலர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது

ஒரு வீடு தகர்க்கப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

### இலங்கை இனப்பிரச்னைக்கு

# பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணவேண்டும்!

## இந்தியத் தலைவர்கள் லலித்திடம் வற்புறுத்தல்

### ஜே. ஆர். – ரஜீவ் உயர்மட்ட தொடர்புக்கும் ஏற்பாடு

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென இந்தியத் தலைவர்கள் இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியிடம் வலியுறுத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது. அதேசமயம் இரு நாடுகளுக்குமிடையில் ஜனாதிபதி - பிரதம மந்திரி மட்டத்திலான உயர்மட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற வேண்டுமெனவும், இப்பேச்சு வார்த்தைகள் மூலம் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்றும் திரு. லலித் அத்துலத் முதலி நடத்திய பேச்சுக்களின் போது முடிவு செய்யப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

இந்தியத் தலைவர்களுடன் பேசசுக்களை முடித்துக்கொண்ட திரு. அத்துலத் முதலி நேற்றைய தினமே இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் புறப்படவிருந்தார். இலங்கை புறப்படு முன்னர் திரு. அத்துலத் முதலி விடுத்த ஓர் அறிக்கையில் இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாக உயர்மட்ட நிலையில் தொடர்பு கொண்டிருக்க இலங்கையும் இந்தியாவும் இணங்கியுள்ளதாகக் கூறியுள்ளார்.

### பிரதமர் ரஜீவ் கருத்து

இதேவேளை நேற்று உத்தரப் பிரதேசத்தில் பெரேலி விமான நிலையத்தில் பத்திரிகையாளரிடம் பேசிய பிரதம மந்திரி திரு. ரஜீவ்காந்தி இலங்கை இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்று கருத்து வெளியிட்டார். இலங்கைக்கும் பாரதத்துக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் மூலம் நல்லபலன் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

### அத்துலத்முதலி அறிக்கை

இலங்கை புறப்படும்முன் அமைச்சர் திரு. அத்துலத் முதலி விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

''இலங்கையின் இனப்பிரச்னை குறித்து இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தியுடன் திறந்த மனத்துடனும், நட்புறவுடனும் ஆக்க பூர்வமான முறையில் நான் பேச்சுவார்

(8ம்- பக்கம் 3-ம் கலம்பார்க்க

### சமூக ஸ்தாபனங்கள் வழங்கும்

## நிவாரண உதவிகள் நாளை முதல் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

மூன்று சமூக சேவை ஸ்தாபனங்கள் சேர்ந்து வடபகுதியில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு வழங்கும் நிவாரண உதவி நாளை முதல் வழங்கவிருக்கின்றன.

ஒரு குடும்பத்துக்கு 4 ரின் மக்கரால் மீன், ஒன்றரைக் கிலோ பருப்பு, 2 கிலோ அரிசி, 3 பக்கட் லக்டோஜன், 4 பக்கட் அங்கர் பால்மா ஆகியவை இந்த

(8ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## அண்ணா சமாதியில் எம். ஜி. ஆர். அஞ்சலி

(சென்னை)

திரு. எம் ஜி. ராமச்சந்திரன் 3-வது தடவையாக நேற்றுத் தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் அண்ணா சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

அதன்பின்னர் திரு. ராமச்சந்திரன் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்திற்குச் சென்று தலைமைச் செயலாளர் திரு. கே சொக்கலிங்கத்தை சந்தித்த பின்னர் வீடு திரும்பினார்.

பதவியேற்ற பின்னர் திரு. ராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளதாவது:

''தமிழக மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் தொண்டு செய்ய எனக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

''எனது எண்ணங்களையும்,

(8-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க]

## மின்சார சேவைகள் திடீரென ஸ்தம்பிக்கலாம்

[யாழ்ப்பாணம்]

மின்சாரப் பராமரிப்புப் பொருட்கள் பெருமளவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணப்பகுதியில், எந்த நேரத்திலும் மின்சார சேவை ஸ்தம்பிக்கும் என அஞ்சப்படுகிறது.

மின்பராமரிப்புக்குத் தேவையான சகல பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதால் மின் ஊழியர்கள் கடமையாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாம்.

கொக்குவில், கோண்டா

(8-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

### பிரச்னை ஏற்படுத்திய

## அந்த விமானம் இலங்கை சேர்ந்தது

[சென்னை]

எரிபொருள் நிரப்புவதற்காக திருவனந்தபுரம் விமான நிலையத்தில் தரித்து நின்ற 'ஸயர்' நாட்டு விமானம் கொழும்பு செல்வதற்கு இந்திய மத்திய அரசினால் நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

இந்த விமானத்தில் ஆயுதங்களும், வெடிமருந்துகளும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இதனை இந்திய

[8-ம் பக்கம் 3-ம்கலம் பார்க்க]

### மின்சாரசபை அலுவலகங்களில்

## மின் பராமரிப்புப்பொருட்கள் பெருமளவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச பராமரிப்புக் காரியாலயத்தில் நேற்றுக்காலை இனந்தெரியாதவர்களால் சுமார் 1,50.000 பெறுமதியான மின் பராமரிப்புப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது.

வயர்கள், வீதி லைட்டுகள், பிடிச் சிராவிகள், பெருந்தொகையான ஈயம், மெயின் சுவிச்சுகள், கருவிகள் கையுறை

(8ம் பக்க 5 ம்கலம் பார்க்க)

## மட்டு–கொழும்பு தபால் ரயில்சேவை

[கொழும்பு]

மட்டக்களப்பு, திருக்கோணமலைக்கான கொழும்பு தபால் ரயில் சேவை இன்று முதல் நடைபெறவுள்ளது.

## சிங்களவர்களும் கேட்கிறார்கள்

(கொழும்பு)

'ஈழம்' வானொலியின்சிங்கள ஒலிபரப்பில் நவசமசமாஜக் கட்சியின் அறிக்கையொன்றை கேட்க முடிந்ததாம்

கடந்த 8-ம திகதி திவயின பத்திரிகையில் வெளியான ஒரு

[8ம் பக்கம் ம் 4கலம் பார்க்க)

## பஸ்விபத்தில் 6 பேர் பலி

(கொழும்பு)

கண்டிக்கும் சிவனொளி பாதத்துக்குமிடையிலான

(8-ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

அல்சேசன் (Pure Alsation) ஆறு கிழமை, அழகான குட்டிகள் உண்டு. தாய், ரெலிவிசனில் வந்த Lassieயின் வர்க்கம். கொழும்பில் இருந்தவை. 139, கன்னாதிட்டிரோட், யாழ்ப்பாணம். 1760

பருத்தித்துறை கடற்கரை வீதியில் கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி வி. பி சுந்தரலிங்கம், 393, Temple Road, நல்லூர், யாழ்ப்பாணம். 1769

வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம் ஒழுங்கையில் நெடுங்காலம் அனைவரினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கிய விறகுகாலை (தம்பிஐயா குடும்பத்தினர் மீண்டும்இயங்க ஆரம்பித்துள்ளதென்பதை எமது பழையவாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். விலாசம்: 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 1748

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- T. R. J. ஜெயராஜா, 18, டச் ரோட், உடுவில். 1771

பாதுகாப்பும் நல்ல சூழலும் உள்ள ஒரு பரப்பு வெறும் காணி சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியில் (Old park road) விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 1770. C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1770

ஆயசயர் கேப்பை காளை விற்பனைக்குண்டு. பால்கறவை பசுவுக்கு மாற்றலாம். தொடர்பு:- க. மகாலிங்கம், வட்டு கிழக்கு, சித்தன்கேணி, 1773

நல்ல நிலையில் உள்ள 5. SRI தொடரிலக்கமுள்ள Volkswagen கார் விற்பனைக்குண்டு. 22, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 1780

## தேவை

எமது தையல் நிறுவனத்திற்கு அனுபவம் வாய்ந்த ஆண், பெண் தையல்காரர் தேவை. நேரில் வரவும். Durka Text, 164, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். தொலைபேசி: 22704 (1779)

## வாடகைக்கு

பருத்தித்துறையில் அரசினர் வைத்தியசாலையிலிருந்து நூறு யாருக்குள் சகல வசதிகளும் உடைய புதியவீடு வாடகைக்கு உண்டு. 122. ராசாவின்தோட்டம் வீதி, நல்லூர். 1750

## தவறிவிட்டது

அராலி அம்மன் கோவிலில் இருந்து வடக்கு அராலி ரோட் வழியாக வட்டுக்கோட்டை சித்தன்கேணி சந்தி ஊடாக சங்கானை வரைக்கும் உள்ள வீதியில் 9-2-85 அன்று சின்ன வெல்வெற் பேசுடன் பல நகைகளும், தஸ்தாவேசுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விலாசத்தாரோடு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். விலாசம்; ''ஹப்பி கவுஸ்'', அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை. 1777

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல. 84 அ — பிரிவுகள் 524, 532]

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற வேதவனம் கனகசபை இராஜசுந்தரம், சங்கானை என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

இராஜசுந்தரம் கைம் பெண் சிவஞானரத்தினம் ''செறிடேல''- சங்கானை.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல 3850

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1985-ம் ஆண்டு மாசி மாதம் 22-ம் நாளன்று முற்பகல் — மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்
மனு. சட்டத்தரணி

1985-ம் ஆண்டு தை மாதம் 28-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 1651

## கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பிரவுண் கம்பனியின் யாழ்ப்பாணக் கிளையிலிருந்து பெறுமதியான பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன. (மா)

## மீனவர் விவகாரம்

(முல்லைத்தீவு)

கொக்கிளாய், நாயாறுக்கு ஆயுதப்பயிற்சிபெற்ற மீனவர் குழு ஒன்று மீண்டும் தங்கள் வாடிகளுக்கு வந்து. தொழில் செய்வதற்கு இம்மாதம் நடுப்பகுதியில் வரவிருப்பதாகத் தெரியவருகிறது. (க)

## 'ஆசாமி' அகப்பட்டார்

(மன்னார்)

கடலில் போடப்படும் பட்டிவலையில் மீன்வகைகளைத் திருடிவந்த ஆசாமி ஒருவர் அகப்பட்டார்.

இச்சம்பவம் விடத்தல் தீவில்கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கடலில் போடப்படும் பட்டிவலையில் அகப்படும் மீன்வகைகள் தினமும் திருடப்பட்டு வந்தது. இதனை அவதானித்து வந்தபட்டிவலைச் சொந்தக்காரர் சம்பவதினம் ஆசாமியை கையும். மெய்யுமாகப் பிடித்தனர்.

## 'வெரித்தாஸ்' வானொலி

[யாழ்ப்பாணம்]

பிலிப்பைன்ஸின் 'வெரித்தாஸ்' வானொலியின் இரவு நேரத் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும் அலைவரிசைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாளை 12ம் திகதி முதல் 'வெரித்தாஸ்' இரவு நேர தமிழ் ஒலிபரப்பை தற்போது ஒலிபரப்பாகும் 31 மீற்றர் அலைவரிசையில் பிறிதொரு இடத்தில் கேட்க முடியும். (சு)

## கொள்ளையின் பெறுமதி 52,000 ரூபா

[ஊரெழு]

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனை நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற கொள்ளைச்சம்பவத்தின்போது, 41,587 ரூபா பெறுமதியான பொருட்களுடன் மேசை லாச்சிக்குள் வைக்கப்பட்டிருந்த 8,444 ரூபா ரொக்கப்பணமும், பாவனையிலிருந்த மின்விசிறியும், சுவர்க்கடிகாரமும் கொள்ளையடிக்கப் பட்டிருப்பதாக சங்கத்தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

பணத்துடன் வைக்கப்பட்டிருந்த 41,916 ரூபா பெறுமதியான காசோலைகள் கொள்ளையடிக்கப்படவில்லை.

மேற்படி மொத்த விற்பனை நிலையத்தில் 48 வகையான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகவும், இவற்றில் ரயர், ரியூப், பிடவை, பால்மா வகைகளே அதிக பெறுமதியானவை என்றும், கொள்ளையின் மொத்தப்பெறுமதி 5 ,032 ரூபாஎன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இனிப்பு விநியோகஸ்தர் தேவை

உயர்ரக இனிப்புவகைகள் தயாரிக்கும் தொழிற்சாலையினது இனிப்புகளை (Sweets) விநியோகிப்பதற்கு இலங்கையின் பல்வேறு இடங்களிலும் விநியோகஸ்தர் தேவை. விபரங்களுடன் இம்மாதம் 25 ந் திகதிக்குமுன்னர் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.

மனேஜர்,
''றூட்ஸ்'' 59, 4 ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
1751

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

நா. பரமசாமி (11-2-85)

எங்களை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மசாந்திக்காக கண்ணீர் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
12 ம் வட்டாரம்,
புங்குடுதீவு.
1778

## அந்தியேட்டியும் நன்றி நவிலலும்

அமரர் ச. படிகலிங்கம்



தோற்றம்:
27-3-1927
மறைவு:
13-1-1985

பூநகரி கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தராய் இருந்து இளைப்பாறியவரும், புளியங்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாகிய அமரர் ச. படிகலிங்கம் அவர்களின் மரணச்சடங்குகளில் கலந்து அவருடைய திடீர் மறைவினால் ஏற்பட்ட பிரிவுத்துன்பத்தில் பங்குகொண்டு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். 12-2-85 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் பங்குகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மனைவி, மக்கள், மருமகன்,
உறவினர். (1776)

## கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் முல்லைத்தீவு

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் — 104/7

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் இலங்கைப்பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் அண்மையில் பெறப்பட்ட இருநற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-02-85ந் தேதி பகல் 12-00 மணிக்கு அல்லதுஅதற்கு முன்பாக தலைவர், கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். முல்லைத்தீவு என்ற முகவரிக்கு. இடதுபக்க மேல் மூலையில் கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் என எழுதப்பட்ட பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

**தகைமைகள்:**

(1) பிரித்தானிய கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியும் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனங்களில் 4வருடங்களுக்குக்குறையாத அனுபவமும்

அல்லது

(2) கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி உயர்தரம் சித்தி அல்லது க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியும் அத்துடன் 6 வருடங்களுக்குக் குறையாத கணக்குப் பதிவியலில் உள்ள அனுபவமும்

(3) 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர்,

**வயது:**

25க்கும் 40க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும், இதையொத்த பதவி வகித்தவர்களுக்கு வயதெல்லையில் சலுகைகள் வழங்கப்படும்.

**சம்பளம்:**

600 — 40 / 10 — 1000/-

இச்சம்பளத்திற்கு உரித்துடையதும், நடைமுறையிலிருக்கும் மேலதிக அலவன்ஸ்களும் வழங்கப்படும். விண்ணப்பதாரி தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

தலைவர்.

முல்லைத்தீவு-01-02-85. 1743

1. ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2. குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/5 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# எம். ஜி. ஆர். முதலமைச்சராக எளிய முறையில் பதவி ஏற்றார்!

## அமைச்சர்கள்பட்டியல்நாளைவெளிவரும்

(சென்னை)

**தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சராக திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுக் காலை மீண்டும் பதவி ஏற்றார். திரு எம். ஜி. ராமச்சந்திரன் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.**

சென்னையிலுள்ள ராஜ்பவனில் ஆளுநர் மாளிகையில் உள்ள சிறிய அறையொன்றில் திரு எம். ஜி ராமச்சந்திரன ஆடம்பரமற்ற எளிய முறையில் பதவியேற்றுக் கொண்டார்.

ஆளுநர் திரு. என். எல் குரானா முதலமைச்சருக்குப் பதவிப் பிரமாணமும், இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

பதவியேற்பு வைபவத்தில் அரசியல் வட்டாரங்களுடன் தொடர்புடைய ஒரு சிலரைத் தவிர மற்றையோர் கலந்து கொள்ளவில்லை

நேற்றைய நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் மட்டுமே பதவி ஏற்றுக்கொண்டார் ஏனைய அமைச்சர்கள்பற்றிய விபரங்களும் பெயர்களும் நாளை ஆளுநரிடம் முதலமைச்சர் கையளிப்பார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ஆளுநரைச் சந்தித்த எம். ஜி. ராமச்சந்திரன், தமது முன்னைய அமைச்சர்களின் ராஜினமாக்களைக் கையளித்தார். இதனைத் தொடர்ந்து அவரைப் புதிய முதலமைச்சராக நேற்று முதல் நியமிப்பதாக ஆளுநர் அறிவித்தார்.



1917ம் ஆண்டு ஜனவரி மாதம் 17ம் திகதி இலங்கையில் கண்டியில் பிறந்த திரு எம். ஜி ராமச்சந்திரன், சிறு வயதிலேயே இந்தியா சென்று நாடகத் துறையில் சேர்ந்து நடித்தார். பின்னர் திரைப் படத்துறையில் சேர்ந்த அவர், தமிழகத் திரைவானில் திரைப் பட நுட்பங்களைக் கையாளுவதில் மேதையாகவும், இத்துறையின் முடிசூடா மன்னனாகவும் விளங்கினார்.

ஆரம்பத்தில் பெருந் தலைவர் காமராஜரிடம் அரசியலில் சேர்ந்த அவர், பின்னர் பேரறிஞர் அண்ணாவின் திராவிடக் கொள்கையில் பற்றுக்கொண்டு தி. மு. க.வில் சேர்ந்துகொண்டார். அறிஞர் அண்ணாதுரை, மு. கருணாநிதி ஆகிய இருவரது ஆட்சிக் காலங்களில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. ராமச்சந்திரன், 1972ம் ஆண்டு தி. மு. க.விலிருந்து விலக்கப்பட்டார்.

ஒரு சில மாதங்களில் அனைத்து இந்திய அண்ணா தி. மு. க. என்ற புதிய கட்சியை ஆரம்பித்த எம். ஜி. ராமச்சந்திரன், 1977ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று அந்த ஆண்டு ஜூன் மாதம் 30ம் திகதி முதலமைச்சராகப் பதவியேற்றார்.

பின்னர் 1980ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இவரது கட்சி படுதோல்விகண்டதைத் தொடர்ந்து 1980 பெப்ரவரி மாதம் இவரது அமைச்சரவை கலைக்கப்பட்டது. 1980 சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்று 1980ஜூன் 9ம் திகதி மீண்டும் இரண்டாவது தடவையாக முதலமைச்சராகப் பதவி ஏற்றார்.

1984 அக்டோபர் 5ம் திகதி சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்ட இவரது வலது பக்கம் செயற்படவில்லை. நவம்பர் 6ம் திகதி அமெரிக்க 'புறூக்ளின்' மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மாற்று சிறுநீரகச் சிகிச்சையின் பின்னர் இம்மாதம் 4ம் திகதி நாடு திரும்பினார்.

இவரது கட்சி மூன்றாவது தடவையாகவும் டிசம்பர் 24ம் திகதி நடைபெற்ற தேர்தலில் பெரும் வெற்றி பெற்றதினால் நேற்று மூன்றாவது முறையாகவும் முதலமைச்சர் பதவி ஏற்றார்.

திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தொடர்ந்து 5வது தடவையாகச் சட்ட மன்ற உறுப்பினராக இருந்துவருகிறார். (சு)

## தமிழரைப் பாதுகாக்க ஜனார்த்தனன் யோசனை

(சென்னை)

"இலங்கையில் வன்செயல்களினால் பாதிக்கப்படும் தமிழர்களை பாதுகாப்பதற்கு இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை உடனடியாக விலக்கி கொள்வதுதான் ஒரே வழியாகும்" என்று உலகத்தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. இரா ஜனார்த்தனன் தெரிவித்துள்ளார்.

தற்போது புதுடில்லியில் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியிடம் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி மேற்படி கோரிக்கையை வலியுறுத்த வேண்டும் என்று அவர் கூறி கூறினார். (சு)

## தொலைபேசிசேவை ஸ்தம்பிதம்

(மன்னார்)

மன்னாரிலிருந்து வெளியிடங்களுக்கான நேரடி தொலைபேசி சேவை கடந்த 29ம் திகதி முதல் முற்றாகஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனால் மன்னாரிலிருந்து வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ளமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

## "இலங்கைத் தமிழரின் உரிமைகளை வழங்குமாறு அமெரிக்காவற்புறுத்துகிறது"

### இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர்கூறுகிறார்

(மதுரை)

**இலங்கையில் தமிழர்களின் நியாயமான உரிமைகளை ஏற்றுக்கொள்ளுமாறு அமெரிக்கா இலங்கையிடம் வற்புறுத்தி வருகிறது. என்று இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் திரு. ஹாரிபான்ஸ் தெரிவித்துள்ளார்**

நேற்று முன்தினம் மதுரையில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியிலான தீர்வொன்றை காணுவதையே அமெரிக்கா விரும்புகிறது என்றும் அவர் தெரிவித்தார்

"இந்தியாவின் ஒற்றுமை, பிரதேச ஒருமைப்பாடு கூட்டுச்சேராக்கொள்கை ஆகியவற்றுக்கு தமது நாடு பூரண ஆதரவு அளித்து வருகிறது. பலமான ஸ்திரமான இந்தியாவையேஅமெரிக்கா விரும்புகிறது. அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே உயர்நிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்"என்றும் அவர்தெரிவித்தார். (சு)

## சகல வேட்பு மனுக்களும் நிராகரிப்பு!

(பட்னா)

பீஹார் மாநிலத்தில் 'லத்தேகர்' சட்டப்பேரவை தொகுதி தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல்செய்த 6 வேட்பாளர்களின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன


ஒரு தொகுதியில் நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்த சகல வேட்பாளர்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டது. இந்திய தேர்தல் வரலாற்றில் இதுவே முதல் தடவை என்று தேர்தல் கமிஷன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சு)

## 20 பேர் விசாரணையில்!

[கொழும்பு]

வடபகுதியில் 3 பெண்கள் உட்பட 20 பேர்ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்று இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

## "இந்தியா ருடே" விசேட பேட்டி



"இலங்கையில் புதிய நாடு அமைக்கும் நிலைக்கு இந்தியா இன்னும் வரவில்லை."

- ரஜீவ்

"இலங்கையில் புதிய நாடு ஒன்றை உருவாக்கும் நிலைக்கு இந்தியா இன்னும் வரவில்லை அங்குள்ள இனப்பிரச்னைக்கு ராஜதந்திர தீர்வே தேவைப்படுகிறது இலங்கையர்கள் இத்தகைய தீர்வை ஏற்படுத்தவே முன்னிற்பார்கள் என்று நம்புகிறேன்" என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி கூறியுள்ளார்.

"இந்தியா ருடே" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே இலங்கை விவகாரம் குறித்து மேற்கண்டவாறு அவர் கருத்து வெளியிட்டார்.

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தீவிரவாதிகள் குறித்து நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது.

திரு ரஜீவ் காந்தி அதற்குப் பதிலளித்ததாவது:-

"இது குறித்து எதுவித பாரதூரமான தகவல்களும் எமக்குக் கிடைக்கவில்லை.

அவர்கள் சில துண்டுப்பிரசுரங்களையும் வேறு சில அறிக்கைகளையும் எனக்கு வழங்கியுள்ளார்கள் இவற்றை இலங்கைத் தமிழ் அகதிகளே அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். இது குறித்து நாம் எதுவும் செய்யமுடியாது. எவருக்கும் எதனையும் பிரசுரிக்க உரிமை உண்டு அவர்களது பிரசுரங்களையும் நாம் பரிசீலித்தோம். என்னைப்பொறுத்தவரை தமிழகத்தில் எதுவித பயிற்சிகளும் வழங்கப்படவில்லை.

இலங்கையில் இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகள் மீண்டும் போய் வாழ்வதற்குரிய சூழ்நிலையும், தீர்வும் ஏற்பட வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம்

இந்தியாவில் 40 ஆயிரம் இலங்கைத்தமிழர்களையும் நாம் வைத்திருக்க முடியாது. இத்தொகை மேலும் அதிகரித்துள்ளதென்றேகூறப்படுகிறது. இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள்பயங்கரமானவை.

இராணுவ அல்லது பலாத்காரம் மூலமான தீர்வுகள் பலனளிக்கமாட்டாதென்பதனையே நாம் நம்புகிறோம். இத்தகைய நடவடிக்கைகள் இலங்கை அகதிகளுக்கு அங்கு மீண்டும் செல்லக்கூடிய நிலைமையை உருவாக்கமாட்டாது. ஆகையினால் அரசியல் தீர்வு ஒன்றுக்கே அவர்கள் முன்வர வேண்டுமென்பதை நாம் விரும்புகிறோம்.

இலங்கை அப்பாவித் தமிழர்கள் மீண்டும் இலங்கை சென்று நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலையையே நாம் உண்டுபண்ண வேண்டும்" என்றார்.

அரசியல் தீர்வென்பது மிகவும் கஷ்டமானதொன்றாகவே தென்படுகின்றது ஆகையினால் புதிய நாடொன்றை அமைப்பது குறித்து உங்களது நிலைப்பாடு இருக்கிறது?என்று அடுத்த கேள்வி கேட்கப்பட்டது.

இக்கேள்விக்கு அவர் பதிலளித்ததாவது:- "இலங்கையில் புதிய நாடொன்றை உருவாக்கும் நிலைக்கு இந்தியா இன்னும் வரவில்லை என்றே நான் நம்புகிறேன். அங்குள்ள இனப்பிரச்னைக்கு ராஜதந்திரத் தீர்வே தேவைப்படுகின்றது இலங்கையர்கள் இத்தகைய தீர்வை ஏற்படுத்தவே முன்நிற்பார்கள் என்று நம்புகிறேன்" என்றார். [கி]

## மணிவாக்கு

உண்டானபோது நானுறுர்க் குதவவும்
சண்டாளரோடு சச்சரவின்றி வாழவும்
கண்டொன்று சொல்லாமற் காலங்கழிக்கவும்
மண்டலம் புகழிலங்கை மாநகரானே

— சிவயோக சுவாமிகள்

# இருபத்தேழாவது ஆண்டில் இன்றுஅடிவைக்கும் 'ஈழநாடு'

## நமதுநோக்கு

### இந்த அம்மி நகராது

கால் நூற்ருண்டு கழிந்து அடுத்த கால் நூற்ருண்டின் முதலாவது வருட முடிவை ஈழநாடு இன்று காண்கின்றது.

இருபத்தொராவது நூற்ருண்டில் உலகம், எமது தேசம், எங்கள் ஊர் எவ்வாறிருக்குமென்பதை ஓரளவிற்காவது கற்பனை செய்ய முடியுமாயின் இன்றைய சுபதினத்தில் எங்கள் சிந்தனை எத்திசையை நோக்க வேண்டுமென்று கொள்ளலாம்.

இன்று உலகிலும் நாட்டிலும் அடர்ந்திருக்கும் இருள் எங்கள் கைவிளக்கின் ஒளியைத் தாண்டி நிற்கின்றது.

எங்கள் வெள்ளி விழா ஆண்டு தமிழ் மக்களுக்கு விடிவில்லா ஆண்டாக விளங்குகின்றது. இருண்ட வாழ்வில் இது ஒரு சாதனை.

தமிழர் விடுதலைப் போராட்டம் யாழ்ப்பாணக் கச்சேரியில் ஆரம்பமான கட்டத்தில், அதற்கு முன்னேடியாக அவதரித்த இச்சிறு பிரசுரம் கடந்த 25 ஆண்டு காலமாக தமிழ் மக்களின் சுதந்திர பயணத்துக்கு ஒரு கை விளக்காக உதவியதை வெள்ளி விழா மலரில் குறிப்பிட்டிருந்தோம்.

27-வது ஆண்டில் இன்று அடியெடுக்கும்போது வீட்டிலிருந்து வெகு தூரம் போய் விட்டோம். இருள் அதிகரித்திருக்கிறத; துன்பவாழ்வு தொடர்ந்து கொண்டேபோகிறது என்ற மனதைத் தளரவைக்கும் சிந்தனைகள் மலிந்துகிடப்பதைக் காண்கின்ருேம்.

எந்தப் புயலைக் கண்டும் கைவிளக்கு அணையவில்லை; தொடர்ந்து கொழுந்துவிட்டெரிவது எங்கள் எதிர்காலத்துக்கு உறுதியளிக்கிறது; இரண்டொருநாள் பத்திரிகை வெளியிட முடியாத போதும், காகிதத் தட்டுப்பாடு அச்சுறுத்தியபோதும், மக்கள் குரல் கேட்க முடிந்தது மகேசனின் அருள் எனத்தலைதாழ்த்தி வணங்குகின்ருேம்.

இங்கொரு போர் நடந்து கொண்டிருப்பதையும்அதன் கொடுமைகளை நேரில் நாம் அனைவரும் அனுபவிப்பதையும் நன்ருகப் புரியாவிடின் எமது சமூகம் வருங்காலத்தில் தளர்வுற்று தாழ்ந்து போகும் அபாயத்துக்குள்ளாகும்.

இங்கு உருவான அரசியல், பொருளாதார, சமூக பாகுபாட்டுக்குப் பலியாகாது, வசதியுள்ள பலர் நாட்டைவிட்டு வெளிநாடுகளில் நல்ல தொழில் பெற்று வாழ்கின்றனர்.

வசதியற்றவர்கள் ஆயிரக்கணக்கில் மத்தியகிழக்கு போன்ற எண்ணெய் நாடுகளில் தொழில் புரிந்து பொருள் சம்பாதிக்கின்றனர். மூன்ருவது பிரிவினர் அகதிகள் என்ற கோதாவில் பல்லாயிரக்கணக்கில் பிரான்ஸ், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் நிவாரணம்பெற்றும், தொழில் பெற்றும் தப்பி வாழ்கின்றனர்.

பிறந்த நாட்டிலேயே உயிர் வாழ, உழைக்க வேண்டுமென்று விரும்பியோ அல்லது வெளியேற வசதியின்றி இங்குதான் வாழவேண்டுமென்ருே வாழும் மக்கள் குறிப்பாக வடபகுதியின் கரையோரங்களில் நடைபெறும் ராணுவ அட்டூழியங்களுக்கு அஞ்சி தமிழகம் செல்கின்றனர்

இலங்கைக் கடற்படையினரைத் தப்பிச்செல்வது ஒரு சாதனையாளுலும் இங்குள்ள பயங்கரநிலை இதற்குத் தூண்டுகிறது

எஞ்சி வாழும் தமிழ் மக்கள் எந்தப்பகுதியில் வாழ்ந்தாலும் அகதிகளாகவே வாழ்கின்றனர். முகாம்களிலோ வீடுகளிலோ எங்கு வாழ்ந்தாலும் அகதி வாழ்வே. 1958ல் ஆரம்பமான இந்த வாழ்வு இன்றைய ஆட்சி ஆரம்பத்திலிருந்து, 1977, 1981இலும், 1983 தொடக்கம் இன்றுவரைக்கும் ஓயாத மழைபோல் தொடர்கிறது.

அகதிகளாகலாம் ஆனல் அடிமைப்படோம் என்ற உணர்வு இலங்கை வாழ் தமிழ்மக்கள் அனைவர் உள்ளத்திலும் உறுதிகொண்டிருப்பதே இன்றைய இருளில் 'மின்னும் ஒளி', அதனைப் பிரதிபலிப்பதே எங்கள் பத்திரிகையின் பணிவான சேவை.

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற உண்மையில் ஐக்கிய தேசியக்கட்சி நம்பிக்கை வைத்திருந்தால் அதற்கு இலங்கையைத் தமது நாடெனக்கொண்ட தமிழர் புறநடை என்பதை உணர வேண்டும்.

''போர் வேண்டுமென்ருல் போர், சமாதானம் என்ருல் சமாதானம்'' என்று 1977ல் கிடைத்த பெருவெற்றியில் செருக்கடைந்த ஆட்சியாளர் விட்ட சவால் இன்று இரண்டுதுண்டாகப் போய் விட்டது போருக்குப் போர் தொடுக்கத் திண்டாடும் வேளையில் சமாதானம் தவிர்க்க முடியாததாகிறது.

அகதிகள் புனர்வாழ்வு இன்றைய போரின் இன்னெருபக்கம்; அதுவே தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு பெரும் பொறுப்பாகின்றது.

### ஆசிரியர் இடமாற்றம்

[மானிப்பாய்]

யாழ். வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து விசேட ஆங்கில ஆசிரியை திருமதி எல். அருள்லிங்கம், கம்பளை சிகிரா கல்லூரியிலிருந்து விசேட கைப்பணி ஆசிரியர்திரு. எஸ். செல்வராஜா ஆகிய இருவரும் இம்மாதம் தொடக்கம் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

[கி]

### இருபத்தேழாவது ஆண்டில் இன்றுஅடிவைக்கும் 'ஈழநாடு'

தமிழர் தம் அபிமான ஏடான 'ஈழநாடு' இன்று 11-2-85ல் 27 வது வயதில் அடியெடுத்து வைக்கிறது:

''ஈழநாடு'' இலங்கையின் வரலாற்றில் மிகமுக்கியமானதொரு கட்டத்திலே தோன்றியுள்ளது...

''சாதி மத பாகுபாடுகளால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை நீக்கித் தமிழ் மக்களை ஒரு முகப்படுத்தி அவர்களை ஆக்கபூர்வமான முயற்சிகளில் வழிப்படுத்துவதற்கு 'ஈழநாடு' பணிசெய்யும்...

''.. அருட் செல்வத்துக்குரிய ஆத்மீகப்பண்புகளையும் 'ஈழநாடு' பேணிக் காக்கும். கல்வி கலாசாரத் துறைகளுக்கான விருத்திகளுக்காக 'ஈழநாடு' மிகுந்த கவனம் செலுத்தும் ..''

இவ்வாருன மகிழ்ச்சியும் துணிச்சலுமிக்க செய்தியைத் தாங்கியவாறு இலங்கை கண்ட முதலாவது இரத்தக் களரி ஆண்டான 1958க்கு அடுத்த வருடம் பெப்ரவரி 2ம் திகதி இலங்கையின் முதலாவது மாகாண வாரஏடாகத் தமிழ் மணம் பரப்பி மலர்ந்தது 'ஈழநாடு'.

1958 ல் போனவர்போக, கொழும்பிலும் தெற்கின் பிற இடங்களிலும் அல்லலுற்று ஆற்ருது கப்பலிலும் ரயிலுமாகத் தாயகம்திரும்பிய நம்மவர் தெற்கின் தாகம் தணியாதவராய், கொழும்பிலிருந்து இறக்குமதியாகும் பத்திரிகைகளை-குறிப்பாக ஆங்கிலப் பத்திரிகைகளை வாங்கி வாசிப்பதில் ஆர்வம் காட்டிவந்த-பெருமையாய்க் கருதிய- காலகட்டத்தில் தேசிய உணர்வும் பரோபகார சிந்தையும் கொண்ட திரு. கே. சி. தங்கராசா, (அமரர்) டாக்டர் கே. சி. சண்முகரெத்தினம் சகோதரர்கள் சமூக நன்மை கருதி தூய்மையை அத்திபாரமாக வைத்து 'ஈழநாட்டை' ஆரம்பித்தார்கள். தமிழிலக்கியப் பரப்பிலும் பத்திரிகைத்துறையிலும் பெரிதும்துலங்கியவரும் அரிய இராஜரத்தினம் என்று பேராசிரியர் கல்கி அவாகளால் புகழப்பெற்றவருமான திரு. இராஜ அரியரத்தினம் அவர்கள் இதன் ஆரம்ப ஆசிரியராவார்.

'ஈழநாடு' முதலாவது இதழ் யோக முனிவருக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி பற்றி 'ஈழநாடு' நிறுவனத்தின் இயக்குநரும் திரு. திரு. கே. சி. தங்கராசா அவர்களின் சகோதரியின் புதல்வருமான பா சிவானந்தன் அவர்கள் 10-வது ஆண்டு மலரில் குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவு கூர்தல் பொருத்தமாயிருக்குமென நம்புகின்றேன்.

''1959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ம் திகதி அதிகாலை 4 மணி. ஒரு தாம்பாளத்தில் ஒருசீப்புஇதரை வாழைப்பழம் தோடம்பழம், சூடம் இவற்றைக் கையிலேந்தியபடி டாக்டர் கே. சி. சிண்முகரெத்தினம் 'ஈழநாடு' அச்சகப்பகுதிக்குள் புகுந்தார். ஒருவாரக் கடின உழைப்பின்பலஞக ஈழநாடு முதற்பிரதி அப்போதுதான் அச்சாகியிருந்தது. அந்தப் பிரதியைச் கையிலெடுத்த டாக்டர் சண்முகரெத்தினம் புறப்படுங்கள் என்ருர். ஆசிரியர். [illegible]

''திரு. இராஜ. அரியரத்தினமும் நானும் டாக்டரைப்பின் தொடர்ந்தோம். கொழும்புத்துறையில் யோகசுவாமிகளின் ஆசிரம வாசலில் கார் நின்றது. சுவாமிகள் அந்நேரம் சிவபுராணம் பாடிக்கொண்டிருந்ததார். அவரை வணங்கியதும் நாங்கள் ஒரு பத்திரிகை ஆரம்பித்திருக்கின்ருேம் என்று கூறி ஈழநாடு முதற்பிரதியைச் சிறிது அச்சத்துடன் அவரிடம் கொடுத்தோம்.

''நன்ருயிருக்கிறது நன்ருக வளரும்''- இதுதான் சுவாமிகள் அருளிய முதல்வார்த்தை

''ஏசுவார்கள் எரிப்பார்கள்; அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாக எழுதுங்கள்'' என்றுஆசி கூறினர். யோகமுனிவர். மறக்க முடியாத நிகழ்ச்சி இது''

இதனை ஒரு மங்களகரமான நிகழ்ச்சி என்று பெரியார் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் வர்ணித்துள்ளார்.

யோகசுவாமிகள் சொன்னவை ஒன்றும் பொய்க்கவில்லை. எல்லாம் அப்படியே நடந்து வருகின்றன. 'ஈழநாடு' உண்மையையே எழுதுகின்றது. உண்மையாகவே எழுதுகின்றது தீயில் தன்னை வேள்வியாக்கியது

ஈழநாடு சொகுசாகவளர்ந்து விடவில்லை. அது ஒரு பாலைவனப் பயணம், மிக நீண்ட பயணம்!

சிலகாலம் ஈழநாடு வாங்கிக் கட்டிய வசவுகளுக்குக் குறைவில்லை. தாம் தாம் போட்டுக் கொண்ட கண்ணுடிகளின் நிறத்தைக் கொண்டு இத்தகராறுகள் எழலாயின. இது ஒரு கட்சி சார்பற்ற, மதசார்பற்ற பத்திரிகை என்பது உணரப்படுவதற்குப் பலகாலம் எடுத்துவிட்டது.

வாசகர்களின் ஆதரவு மட்டுமன்றி ஸ்தாபன ஊழியர்களின் பற்றுமிக்க அயரா உழைப்பும் ஈழநாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்துள்ளதென்பதையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

முன்னர் 'வீரகேசரி' பத்திரிகையில் பிரதம ஆசிரியராயிருந்து பணியாற்றிய பெரியார் கே. பி. ஹரன் (ஐயாறன்) அவர்கள் இங்கு நிர்வாக ஆசிரியராகப் பதவியேற்று ஆற்றியபணி மறக்க முடியாததாகும். யாழ்ப்பாணத்திற்கு முற்றிலும் புதியவராக இங்கு வந்த அவர், தமது சேவையால், அன்பால் யாழ்ப்பாணத்தார் அனைவரையும் கவர்ந்து எல்லார் நெஞ்சிலும் அழியா இடத்தைப் பெற்ருர்;

'ஐயாறன்' அவர்கள் ஈழநாடு 10-வது ஆண்டு மலரில், குறிப்பிட்டிருந்த சில வரிகளை இங்கு தருகின்றேன்:-

''. .மறுவருடம் அதைவாரம் இருமுறையாக்கி விலையைப் பத்துச்சதமாக்கிஞேம. அப்போதும் பத்திரிகை வளரக் காணேம் பத்திரிகை விற்பனை செய்த ஏஜெண்டுகளில் பலர் ஒழுங்காய்ப் பணம் தருவதில்லை. விளம்பரப் பணமும் அதிகம் பாக்கி இடையே பல பெருச்சாளிகள் பத்திரிகையை தொடர்ந்து நடத்த முடியுமோ என்று திகைத்திருக்கையில் அதிபர் கே. சி. டி. 'இன்ஸ்டெட் ஆப் ஸ்லோ டெத் லெடஸ் ஹாவ் க் விக் டெத்' (மெதுவாகச்சாவதை விட சடுதியில் சாகலாம்) அடுத்த வாரத்திலிருந்து தினசரிப் பத்திரிகையாக வெளியிடுங்கள்'' என்று சொல்லி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு என்னை அனுப்பி வைக்கையில் கூறினர்

இ[illegible]நட்க மிக வியப்ப[illegible]ந்தது வாரப் பத்திரிகைக்கான வசதிகள்கூட இல்லாத இடத்தில் ஒரு தினசரிப் பத்திரிகையை நடத்துவதா? என்று தயங்கியபோது, ''தினசரி 500 பிரதிகள் விற்ருல் போதும்'' என்று அசாதாரண உறுதியுடன் சொன்ஞர்.

''தினசரியை நடத்த அனுபவமுள்ள உதவியாசிரியர்கள், ரிப்போட்டர்கள், புறூவ் றீடர்கள், போர்மன் எல்லாம் தேவை. என்ன செய்வது? அச்சமயம் அந்தக் கொழும்புத் தினசரியில் வேலை நிறுத்தம் ஏற்பட்டதால் அனுபவமுள்ள பல ஊழியர்களின் உதவி சற்றும் எதிர்பாராத முறையில் கிடைக்க முடிந்தது. ஊதியம் குறைவு என்ருலும் அவர்கள் தியாகப் பணிபுரிய முன்வந்தனர். இறைவன் எப்படியெல்லாம் உதவியுள்ளான் பாருங்கள்''.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் பலவித கஷ்டங்கள், தடைகள் இவற்றையெல்லாம் ஏற்றுத்தாண்டி

[5ம்பக்க 1ம் கலம்பார்க்க]

### தமிழர் தம்மனத்தினில் திகழ் விளக்கே

குன்றினில் ஒளிர்விளக்கே-தமிழ்க்
குலத்தது மனத்திடைத் திகழ்விளக்கே
நன்றுகள் தருவிளக்கே- இந்த
ஞாலமெலாம் புகழ்செயும் விளக்கே
வென்றிகள் பலபுரிவாய்- எந்த
வீட்டிற்கும் அறிவொளி பரப்பிடுவாய்
எஸ் றென்றும் வாழியவே- ஈழ
நாடெனும் நாமம்கொள் சுடர்விளக்கே!

★ ★ ★

உண்மையை விளம்பிடுவாய்- தர்மம்
உயர்வெனும் நிலையினை மறந்தறியாய்
திண்மைகொள் வாழ்வுடையாய்- தனிச்
சிறப்புக்கள் மிகமிகப் பலவுடையாய்
அண்மையில் நிகழ்வதையும்- 'மைல்''
ஆயிரம் தொலைவினில் நிகழ்வதையும்
கண்ணெனக் காடடிவைப்பாய்- எந்தக்
காலமும் வாழிய வாழியவே!

★ ★ ★

ஞானத்தின் தெளிவுபெற்ருேர்- இரு
ஞானியர் ஆசியில் நீவளர்ந்தே
தேனெத்த கவிதைகளும் நல்ல
சிந்தனை வளர்த்திடும் கருத்துக்களும்
வானத்து முகிலெனவே- பயன்
வழங்கிடும் பலப்பல சேதிகளும்
நானிலம் சிறக்கவென்றே- என்றும்
நல்கிடுவாய் நினைவாழ்த்து கின்ருேம்!

ம. பார்வதிநாதசிவம்

## இருபத்தேழாவது..

(4-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

'ஈழநாடு' தனது பொறுப்பு மிக்க பணியைத் தொடர்ந்து பேணி நடத்திவருகின்றது என்பதை வாசகர்கள் நிச்சயம் அறியவே செய்வார்கள்.

செய்தி, பத்திரிகைக் காரியாலயத்துக்குக் கிடைப்பது செய்தியைப் பத்திரிகையில் பிரசுரிப்பது, பத்திரிகை வாசகர்கள் கையில் உரியநேரத்தில் சேர்ப்பது - இதெல்லாம் இப்போதுள்ள சூழ்நிலையில் எவ்வளவு சிரமமான காரியம் என்பது அதிகம் விளக்கத் தேவையில்லாத ஒரு விஷயம்.

இத்தனையும் ஏற்று ஒரு பத்திரிகை தனது மதிப்பை வாசகர்கள் மத்தியில் காப்பாற்றி வருகின்றதென்றால் அதன்பின் நின்று உழைப்பவர்கள் எவ்வளவு விடாமுயற்சியுடனும், நம்பிக்கையுடனும் உழைத்து வருகின்றார்கள் என்பது வெள்ளிடைமலை.

வாசகனும், பத்திரிகைக்காரரும் இணைந்து இருக்கும்போது ஒரு பத்திரிகையால் வாழமுடிகிறது. இவ் விஷயத்தில் 'ஈழநாடு' பெருவெற்றியையே கண்டுள்ளது.

வாசகர்கள் மட்டுமென்ன வர்த்தகர்களும் இணைந்தாலே பத்திரிகை வாழமுடியும். எனவே ஈழநாட்டின் வளர்ச்சிக்கு உதவிய-உதவிவருகின்ற எல்லாருக்கும் ஈழநாடு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மிகுந்த பக்திசிரத்தையுடன் இன்று 27-வது படியில் காலடி வைக்கிறது.

—ஓர் ஊழியன்

## தனியார் நிறுவனத்தில் ரொக்கப்பணம் கொள்ளை!

(கிளிநொச்சி)

கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள ''பயர் அக்கோ கெமிக்கல்'' என்னும் தனியார் நிறுவனத்தில் 29,088 ரூபாய் ரொக்கப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நண்பகல் சுமார் 1-30 மணியளவில் இந்த நிறுவனத்துக்குள் திடீரென உட்புகுந்த இனந்தெரியாத இளைஞர் ஒருவரே, உரிமையாளரை ஆயுதமுனையில் பயமுறுத்தி இக்கொள்ளையை நடத்தியுள்ளதாகத் தெரியவருகிறது. (ரா)

## "கல்வி குழப்பப்பட்டால் இனம் உய்ய முடியாது"

### யாழ். வைத்தீஸ்வரா அதிபர் கருத்து

[மானிப்பாய்]

''கல்வி குழப்பப்பட்டால் ஒரு இனம் எதிர்காலத்தில் உய்யமுடியாது. இதனைப் பொறுப்புள்ள எல்லோருமே உணர்ந்து செயல்பட்டாலே பலவித இக்கட்டுகளையும் நாம் தாண்டி முன்னேற முடியும். நமது இளைஞர்களின் கல்விக்காக நமது மூதாதையர்கள் எவ்வளவோ பணி செய்தார்கள். இதனை நாமும் தடைப்படாது செய்ய முன்வரவேண்டும்''.

இவ்வாறு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சிவசரவணபவன் வேண்டுகோள் விடுத்தார்.

மேற்படி பாடசாலையின் பெற்றோர் - ஆசிரியர் சங்க பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் இணைந்த கூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையிலேயே திரு. சரவணபவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இம்மாதம் 2ம் திகதி முதல் 28ம் திகதிவரை நடைபெறவிருக்கும் க. பொ. த சாதாரண தரப் பரீட்சையின்போது மாணவர்களின் பரீட்சை தடைப்படாது நடத்தப்படுவது குறித்து இக்கூட்டத்தில் விசேஷமாக ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்; ''வட பிராந்திய கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்கவே இப்பரீட்சை மீண்டும் இங்கு நடைபெறவிருக்கிறது என்றும், இது தடைப்படுத்தப்பட்டால் இப்பரீட்சை மீண்டும் எப்போது நடைபெறும் என்பதுபற்றிச் சொல்லமுடியாது என்றும், இதனால் இந்த மாணவரே பெரிதும் பாதிப்புக்குள்ளாக வேண்டியிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் இப்பரீட்சை நடைபெறும் காலங்களில் சங்க உறுப்பினர்கள் இயன்றளவுபாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டபோது இரு சங்கங்களையும் சேர்ந்தபலர் மாணவர் நலன்கருதி முன்வந்தனர்

கல்லூரிமண்டப கூரைப் பீலி வேலைகள், புதிதாக நீர்இறைக்க்கும் இயந்திரம் பொருத்தல் ஆகியவேலைகளை இம்மாத முடிவுக்குள் செய்து முடிப்பதனவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

அபிவிருத்திச்சபைக் காரியதரிசி ஆசிரியர் திரு. க. கணேசலிங்கம் நன்றிகூறினர்.

## நாய் கடித்தவருக்கு 6000 ரூபா நஷ்டஈடு; டில்லி நீதிமன்றம் தீர்ப்பு

(புதுடில்லி)

நாய் கடித்த ஒருவருக்கு நஷ்ட ஈடாக 6000 ரூபாவை நாயின் சொந்தக்காரர் வழங்கவேண்டும் என்று டில்லி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தெற்கு டில்லியில் 1977-ம் ஆண்டு பிரதிப்குமார் யோகி என்பவருக்கு எஸ் எஸ். டக்கால் என்பவரது நாய் கடித்தது. இதனால் பாதிக்கப்பட்ட பிரதீப்குமார் யோகி டில்லி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தார். இவரது வழக்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட போதும் பின்னர் அடபீல் நீதிமன்னத்தில் மேற்படி நஷ்டஈடு வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

நாய் தமக்குக் கடித்ததினால் வயிற்றில் 14 ஊசிகளைப் போடவேண்டியிருந்தது என்று மனுதார் வழக்கில் குறிப்பிட்டிருந்தார். (சூ)

### யாழ். பல்கலைக்கழக

## மலையக மாணவர்களை தெற்குக்கு மாற்றவும்!

### இ. தொ. கா. வேண்டுகோள்

[கொழும்பு]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயிலும் மலையகத் தமிழ்மாணவர்களை பேராதனை அல்லது கொழும்புப் பல்கலைக் கழகத்துக்கு மாற்றவும் என்று இ. தொ. கா. ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

இ. தொ. கா. செயலாளர் திரு எஸ். செல்லச்சாமி ஜனாதிபதியைச்சந்தித்தபோதே மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சுமுகநிலை தோன்றும்வரை அங்குள்ள மலையக தமிழ் மாணவர்களை கொழும்புக்கு அல்லது பேராதனைக்கு மாற்றவும்''.

யாழ்ப்பாணத்தில் நிலவும் குழப்பமான சூழ்நிலை காரணமாக மலையக பல்கலைக்கழக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் யாழ் பல்கலைக்கழ விடுதியில் தங்குமிட வசதிகளும் போதுமானதாகஇல்லை. இதனால் வெளியே வீடுகளில் இம்மாணவர்கள் அதிகளவில் வாடகைப் பணம் கொடுத்துத் தங்கவேண்டியுள்ளது'' என்று மேலும் இ. தொ. கா. கூறியுள்ளது. (கி)

## ஈழநாடே! வாழ்த்துகின்றோம்!!

சூழலும் பூப்பந்தில்
எங்கெங்கோ
நிகழ்பவைகளைத்
தேடிச் சேர்த்து
தொகுத்து வகுத்து
உண்மைகளை
உண்மையாக
எங்கள் முன்
தினம் தினம்
காட்டுகின்ற-
நாங்கள் நாடும்
ஈழநாடே!
நீயொரு
மாயக்கண்ணாடி

★ ★ ★

உலகெங்கும்
பறந்து திரிந்து
நிருபர்த் தேனீக்கள்
சேர்த்து வருகின்ற
செய்திகளையும்
மற்றும் அறிவுத்துளிகளையும்
வடித்துத் தெளித்து
எங்களுக்குத்
தினம் தினம் தந்து
எங்கள் அறியாமைப்
பிணி தீர்க்கும்-
அறிவுப் பசி நீக்கும்
ஈழநாடே!
நீயொரு
தேன்பொந்து!

பல மணம் பரப்பும்
செய்திகள் கொண்டு
பல இதழ்களுடனே
ஒவ்வொரு நாளும்
மலரும் மலர் நீ
அற்புத மலர் நீ
ஈழநாடே!

உன்பணி தொடர
உன்பணி சிறக்க
உன் அணி வலுக்க
திங்கள் சூடும்
வண்ணைச் சிவனார்
பாதம் பணிந்துன்னை
வாழ்த்துகின்றோம்!!

"முருகு"

## மனனப் போட்டி

[சுழிபுரம்]

திருமுருகாற்றுப்படை, விசவத்தனை முருகன் பிள்ளைத் தமிழ் பாடல்கள் மனனப் போட்டியை பண்ணாகம் விசவத்தனை முருகன் கோவில் உற்சவத்தையொட்டி நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மனனப் போட்டியில் பங்குகொள்பவர்கள் தங்கள் பெயரைப் பதிவுசெய்யுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

## நம்பிக்கை இல்லாத்தீர்மானம்

(சுழிபுரம்)

சங்கானை பல நோக்க கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்று சென்ற வாரம் நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. விரைவாக புதிய உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றது

## இன்று மகாகும்பாபிஷேகம்

(வேலணை)

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி அருள்மிகு ஸ்ரீ விரகத்தி விநாயகர் ஆலயததின் மகா கும்பாபிஷேகம் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவிருக்கின்றது

கும்பாபிஷேகத்தை நவாலியைச்சேர்ந்த பிரமஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையேற்று நடத்துகின்றார் கும்பாபிஷேகத் தினத்தன்று யாழ். மாவட்ட இந்து இளைஞர்பேரவைத் தொண்டர்களும் அவ்வூர் பொதுமக்களுடன் இணைந்து தொண்டாற்றுவார்கள்.

## பரந்தன் வை. எம். சி. ஏ. உருக்கமான வேண்டுகோள்

(கிளிநொச்சி)

பரந்தன் வை. எம். சி. ஏ. க்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இனந்தெரியாத இளைஞர்களினால் சில தினங்களுக்கு முன்பு கொள்ளையடிக்கப்பட்டமை தெரிந்ததே.

இதுசம்பந்தமாக கோரசன் கட்டுரீ சமூகநல அபிவிருத்திச் சங்கம் ''உருககமான வேண்டுகோள்'' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கை வருமாறு ''வை. எம். சி. ஏ. என்னும் இவ் ஸ்தாபனம் இப்பகுதி மக்களின்ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிவந்துள்ளது குறிப்பாக கோரசன் கட்டு அபிவிருத்திக்காக இவ்வமைப்பு ஆற்றிவரும் பங்கு மகத்தானது இந் நிலையில் வாகனங்கள் இல்லாமையினால் இதன் அபிவிருத்தி முழுதாக ஸ்தம்பிதமடைந்து விட்டது.

ஆகையினால் இவ்வாகனங்களை கொண்டு சென்றவர்கள் இப்பகுயில் வாழும் கஷ்டப்படும் மக்களின் நன்மைகருதி மீண்டும் திருப்பித்தாருங்கள்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. [ரா]

## வேண்டுகோள்

[இருபாலை]

கடத்திச் செல்லப்பட்ட என் கணவரின் உயிருக்கு எதுவித ஆபத்துமின்றிவிடுதலை செய்யுமாறு திருமதி அமிர்தலிங்கம் பணிவான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அந்தவேண்டுகோளில் அவர் ஒரு சிறுநீரக நோயாளி என்றும், தனசரி மருந்தும் குளிசையும் பாவிப்பவரென்றும் ஆதலால் அவரை உடன் விடுதலை செய்யுமாறும் பணிவாகவும், தாழ்மையுடனும் கேட்டுக் கொள்வதாகக் கூறப்படுகிறது இதபோன்று அவரது பிள்ளைகளும் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பொதுமக்கள் சிரமம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள பல தபால் நிலையங்கள் மூடப்பட்டதாலும், தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப் பட்டதாலும் பொதுமக்கள்தங்கள் அவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியாது சிரமப்படுகின்றனர் முத்திரைவிற்பனை, காசுக்கட்டளை மாற்றுதல், தொலைபேசிசேவை ஆகியன நிறுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் வழமைபோல மூடப்பட்டதால் நிலையங்களை திறக்க நடவடிக்கை எடுக்குமாறும் இப்பகுதியிலுள்ள பொது நலஇயக்கங்கள் தபால் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. (கி)

## பிரஜைகள்குழு

[மாவிட்டபுரம்]

கரையோரப்பகுதி மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கென மயிலிட்டி, பலாலி, ஊறணி பகுதிகளுக்கான பிரஜைகள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கரையோரப்பகுதி மக்கள் படும் கஷ்டங்களை உடனுக்குடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தவும், அதற்கு நிவாரணம் காணவும் இப் பிரஜைகள்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தலைவராக, திரு. ரி. ஈ தேவராஜனும், இணைச் செயலாளர்களாக; திரு. வி. இரத்தினராசா, திரு அ. குணபாலசிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். 17 பேர்கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

# "பிரிட்டனின் இலங்கை உதவி: இந்தியா மிகுந்த கவலை"

## இந்து ஏடு கருத்து

(புதுடில்லி)

''பிரிட்டன் இலங்கைக்கு பெருமளவில் இராணுவ உதவிகளை வழங்குவது குறித்து இந்தியா பெரும் கவலைகொண்டுள்ளது'' என்று இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை 150 கோடி ரூபா செலவில் பிரிட்டனிடமிருந்து இந்தியா கொள்வனவு செய்யவிருந்த 27 ஹெலிகொப்டருக்கான கொள்வனவுக் கட்டளையை இந்தியா திடீரென வாபஸ்பெற்றுக்கொண்டது என்றும் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கியதன் எதிரொலியாகவே இந்தியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டது என்றும் 'இந்து' தெரிவித்துள்ளது.

மேற்படி ஹெலிகொப்டர்கள் இந்தியாவுக்கு வழங்கவிருந்த உற்பத்தித் தொழிற்சாலை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்ரெட் தட்சரின் சொந்த தொகுதியான ''யோவில்'' அமைந்துள்ளது. இந்தியா கொள்வனவுக் கட்டளையை வாபஸ்பெற்றதினால் தனது தொகுதியில் பலவிதமான தாக்கங்களும் பாதிப்பிக்களும் ஏற்படும் என்பதினாலேயே பிரிட்டிஷ் பிரதமர் பெரும்கவலைகொண்டுள்ளார்.

இலங்கைக்கு ஆயுதங்களை வழங்குவது இல்லை என்று அமெரிக்கா முடிவுசெய்துள்ளதையும், இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல்ரீதியாக தீர்வு ஒன்று காணுமாறு அமெரிக்கா வலியுறுத்தி இருப்பதனையும் இந்தியா வரவேற்றுள்ளது'' என்றும் அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## சடலம் அடையாளம் காணப்பட்டது

[வவனியா]

வவனியா ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் 4-ம் திகதி ஒப்படைக்கப்பட்ட சடலம் செட்டிக்குளத்தைச் சேர்ந்த 44 வயதுடைய பெரியசுந்தரம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்காயம் உடலில் காணப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரம் கூறியது.

சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சடலத்தை அடக்கம்செய்ய உறவினர்களிடம் போதிய வசதி இல்லாததனுல் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

## நான்கு கால் கோழிக்குஞ்சு

(யாழ்ப்பாணம்)

நான்கு கால்களைக் கொண்ட கோழிக்குஞ்சு சுழிபுரம் மேற்கிலுள்ள சின்னராசா என்பவர் வீட்டில் வளர்ந்து வருகிறது.

குஞ்சு பொரித்து இன்றுடன் (ஞாயிறு) ஐந்து நாட்கள் தான் ஆகிறதாம். தாய்க்கோழி மற்றைய குஞ்சுகளுடன் இதனையும் அரவணைத்து வருகிறதாம்.

[மா]

## மீனவர் தாக்கப்பட்டனர்

(சுழிபுரம்)

சுழிபுரம் புளியந்துறையில் கரைப்பகுதியில் நின்று மீன்பிடித்த மீனவர் மூவர் பலத்த தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

இரண்டு தினங்களுக்குமுன்னர் தங்கள் வறுமை காரணமாக உணவுக்காக மீன்பிடிக்கச் சென்ற சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் அங்கு வைத்து தாக்கப்பட்டதால் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மூவரும் முறிவுநோய் வைத்தியரிடம் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## மீனவருக்கு உதவ நடவடிக்கை

[மாவிட்டபுரம்]

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மீனவர் கிராமங்களில்வதியும் மீனவர்களுக்கு விசேட உணவு முத்திரைகள் வழங்குவது தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடல் கண்காணிப்பு வலயம் காரணமாக பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மீனவர்களுக்கு விசேட உணவு முத்திரைகள் வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் வலி-வடக்கிலும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விசேட உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சுப்பிரமணியத்தின் பணிப்பின் பேரில் அப்பகுதி கிராம சேவையாளர்கள் மீனவர் கிராமங்கள் தோறும் உள்ள பாதிக்கப்பட்ட மீனவர்களின் விபரங்கள் குறித்து விபரங்களை திரட்டி வருகின்றனர்.

இதற்கு வேண்டிய உதவிகளை மயிலிட்டி, பலாலி' ஊறணி பிரஜைகள் குழு செய்து வருகிறது.

## கண்டன அறிக்கை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனைப்பணம் கொள்ளையடிக்கப்பட்டதுக்கு சங்க அங்கத்தவர்கள், இயக்குநர்கள் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளனர்.

இத்தகைய கொள்ளைகள் காரணமாக சங்கத்தின் அங்கத்தவர்களான ஏழைத்தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன் ஓரளவு முன்னேறிவரும் சீவல் தொழிலாளர்களது கூட்டமைப்பு சீர்குலைக்கப்பட்டு மோசமான சமூகப் பின்னணிக்கு இட்டுச்செல்லும் நடவடிக்கையாகவும் அமையும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 15 ஆயிரத்தை பறிகொடுத்தார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு முன்பாக ஒரு பெண் நேற்றுப் பிற்பகல் 15,000ரூபா பணத்தை பறிகொடுத்தார்.

சைக்கிளில் வந்த இப் பெண் சைக்கிளில் பணத்தை வைத்துவிட்டு அருகிலுள்ள கடையொன்றுக்கு சென்ற போது ஒருவர் இப்பணத்தை எடுத்துக்கொண்டு மாயமாய் மறைந்து விட்டார் என்று கூறப்படுகிறது.

## கான்ஸ்டபிள் நீரில் மூழ்கி மரணம்

(மன்னார்)

கடலில் நீந்தச் சென்ற விசேட பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார்.

தலைமன்னார் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே மரணமானவராகும்.

மரணமானவர் தலைமன்னார் துறை பாலத்தில் கடலில் நீந்திக் குளித்துக்கொண்டிருக்கையில் நீரில் மூழ்கி மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## உதவிப்பணம் வழங்கப்படவில்லை

(ஊரெழு)

சுன்னாகம் தபால்நிலையத்திலிருந்து சமூகசேவைத்திணைக்களத்தின் மாதாந்த உதவிப்பணம் பெற்றுவந்தவர்களுக்கு இம்மாத உதவிப் பணம் வழங்கப்படவில்லை.

மேற்படி தபால்நிலையத்தின் கருமபீடங்கள் மூடப்பட்டு அலுவல்கள் இடை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். இதனால், இங்கு உதவிப்பணம் பெற்றுவந்த நூற்றுக்கு அதிகமானவர்கள் ஏமாற்றமடைந்தவர்களாக, வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபரிடம் முறைப்பாடுசெய்து வருகிறார்கள்.

## வண் மேற்கு நலன்புரிச் சங்கம்

[சுண்டுக்குளி]

வண்-மேற்கில் மக்கள் நலன் புரிச்சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தலைவர் திரு கா. ரூபாமூர்த்தி செயலாளர் திரு மு. ஜெகதீசன் பொருளாளர் திரு. வே கிருஸ்ணனாதன் போஷகர் திரு. கா. அருள்நேசன். ஆகியோர் தெரிவு செய்யபபட்டனர்.


# பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

இதோ மீண்டும் ஆரம்பம்

முற்றுகச் சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளது

இடை நிறுத்தப்பட்ட சகல வகுப்புகளும் பயிற்சிகளும்

**20-02-1985-ல் ஆரம்பமாகும்**

கீழ் குறிப்பிட்டவைக்கான அடுத்த

**வகுப்புகளும் பயிற்சிகளும்**

எதிர்வரும்

**புதன்கிழமை 20-02-1985-ல்**

தொடங்கும

- ★ கொம்பியூட்டர் புரேகிறுமிங் (COMPUTER PROGRAMMING)
- ★ கட்டிடப் படம் வரைதல் (பில்டேர்ஸ் குவாண்ரிற்ரீஸ் உட்பட) (DRAFTSMANSHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES)
- ★ மோட்ரோர் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
- ★ எலக்ரிக்கல் என்ஜினியரிங் வேர்க்ஸ் டிப்புளோமா (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA).
- ★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS)

} ஆறு (06) மாதகால இடைநேரப் படிப்பும் பயிற்சியும்

- ★ றெவ்(F)றிஜறேஷன் (REFRIGERATION)
- ★ எலெக்ரிக் வெல்டிங் (WELDING - ARC)
- ★ கடைச்சல் யந்திரம் இயக்குநர் (LATHE OPERATAR)

} மூன்று [03] மாத கால இடைநேர வகுப்புகளும் பற்யிசிகளும்

- ★ வீட்டு மின் இணைப்பு (ELECTRICAL HOUSE WIRING) ) ஆறு (06) கிழமை இடைநேர வகுப்பும் பயிற்சியும்
- ★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING) ) ஒரு(01) மாத கால இடைநேர வகுப்பும் பயிற்சியும்
- ★ ஆங்கில வகுப்புகள் (SPOKEN ENGLISH)

இவ் வகுப்புகளும் பயிற்சிகளும் முழுமையான வசதிகளுடன் தகைமை வாய்ந்த அனுபவம் கொண்ட ஆசிரியர்களாலும் தொழில்நுட்ப வல்லுநர்களாலும்நடாத்தப்படும்.

வகுப்புகளிலும் பயிர்சிகளிலும் சேர விரும்புவோர் இந்த நிறுவனத்திற்கு நேர்முகமாகவந்து இந்த நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பிக்கவும். தபால் மூலம் விண்ணப்பப் பத்திரங்களோ விபரங்களோ அனுப்பப்படமாட்டாது

ஒவ்வொரு வகுப்புக்கும் பயிற்சிக்கும் ஆகக் கூடியது 15 பேர் மட்டும் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்படுவர்.

உடனடியாகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தவிர்க்கவும்.

பதிவாளர்,

பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

இல:59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் கொள்ளை

(மன்னார்)

பேசாலை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குச் சென்ற ஆயுதம் தாங்கிய 5 இளைஞர்கள் 15 ஆயிரத்து 600 ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றனர்.

சம்பவதினம் ஆயுதபாணிகளாக பேசாலை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குச் சென்ற 5 இளைஞர்கள் மீன்பிடி கூட்டுத்தாபன முகாமையாளரைப் பயமுறுத்தி கூட்டுத்தாபன அலுவலகத்தின் திறப்பையும் பணம் வைக்கப்பட்டிருந்த அலுமாரியின் திறப்பையும் கேட்டனராம்.

மீன்பிடிக் கூட்டுத்தாபன அலுவலகத்தின் திறப்பும், அலுமாரி திறப்பும் மீ பிடி கூட்டுத்தாபனத்தின் பிரதம எழுதுவினைஞரிடம் இருப்பதாக முகாமையாளர் தெரிவித்தார் இதனையடுத்து இரு இளைஞர்கள் முகாமையாளருக்கு காவலாக இருக்க ஏனைய 3 இளைஞர்களும் பிரதம எழுதுவினைஞரின் வீட்டிற்குச்சென்று அவரை துப்பாக்கிமுனையில் அழைத்து வந்து அலுவலகத்தையும் அலுமாரியையும் திறக்கச் செய்து அலுமாரியிலிருந்து 5.060 ரூபாவை கொள்ளையடித்தனர்.

இத்துடன் பேசாலை மீன்பிடி கூட்டுத்தாபனத்திலுள்ள தொலைபேசிகளை அடித்து நொருக்கி. அலுவலகத்தின் சுவர்களில் படங்களையும் அடித்து நொருக்கினராம்.

மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திலிருந்த வானொலி, தொலைதொடர்பு 'மைக்' ஒன்றையும் கொடி ஒன்றையும் எடுத்துச் சென்றனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை

(வண்ணார்பண்ணை)

நாட்டில் பனச்சீனி கருப்பட்டி ஆகியவற்றை அதிக அளவில் உற்பத்திசெய்வதற்கும் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பூரணஆதரவு கொடுப்பதற்கும் தீவிர நடவடிக்கை எடுப்பதென நேற்றுக்கூடிய பனை அபிவிருத்திச் சபை ஏகமனதாக தீர்மானித்துள்ளது

பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதுபற்றியும், தொழிற்சாலைகளை புனரமைப்பது பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

## பொலிகண்டி மீனவருக்கு இன்று உணவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பாதிக்கப்பட்டுள்ள மீனவ குடும்பங்களுக்கு பொறுட்,றெட்பாறு, சர்வோதயம் ஆகிய ஸ்தாபனங்கள் இணைந்து உதவிப்பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றன.

இதன் முதற்கட்டமாக பொலிகண்டியில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்குஇன்று திங்கட்கிழமை உணவுப்பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

# தென்னிலங்கை அரசியல் பிரமுகர்கள்

## வடபகுதி விஜயம்

(வவனியா)

தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் சிலர் வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றி நேரில் கண்டறியவும் இப்பகுதியில் உள்ள முக்கிய சில பிரமுகர்களைச் சந்தித்து பேசவும் வடபகுதிக்கு வரவுள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார், வவனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதி பிரமுகர்களை ஒரே இடத்தில் சந்தித்து பிரச்னைகளைக் கேட்டறியவுள்ளனர்.

வவனியா மாவட்டத்தில் இச் சந்திப்பு இடம்பெறலாம் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்னிலங்கையைச் சேர்ந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரமுகர்களே இங்கு விஜயம் செய்யவுள்ளனர்.

## மண்டைதீவு ம. வி. குறைபாடுகள்

(கொழும்புத்துறை)

மண்டைதீவு மகாவித்தியாலயக் குறைபாடுகளைப் போக்கி முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மண்டைதீவு கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டுவருகின்றது.

இம்மகாவித்தியாலய அபிவிருத்தி சம்பந்தமாகத் தூதுகோஷ்டியொன்று வடமாநிலக் கல்விப பணிப்பாளரை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

# புனர்வாழ்வு நிதியம் பரிசீலனை

(வண்ணார்பண்ணை)

ஜூலைக் கலவரத்தின்போது உடைமைகளை இழந்து புனர்வாழ்வு பெறக் கடன் உதவி கோரியவர்களது ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தினால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

புனர்வாழ்வு பெறவேண்டியவர்களுக்குக் கடனுதவி வழங்கும் பரிசீலனைகள் முற்றுப்பெறும் நிலையில் இருந்துவருவதாகவும் அதிகமான விண்ணப்பதாரர்களுக்கு இன்னும் சில வாரங்களுக்குள் கடன் வழங்கும் நடவடிக்கைகள் முடிந்துவிடலாம் என்றும் புனர்வாழ்வு நிதியத்தின் செயலாளர் திரு. ரி. குணசேகரம் தெரிவித்தார்.

குழுவினரின் தீர்மானப்படியே நிதியுதவி வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## நியமனம்

(மானிப்பாய்)

பிரபல கவிஞரும் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற ஆசிரியருமான திரு. ச. வே. பஞ்சாட்சரம் இம்மாதம் தொடக்கம் யாழ். இந்துக் கல்லூரிக்கு நியமனம் பெற்றுள்ளார்.

# லொறி கடத்தல்

(மன்னார்)

மன்னாரிலிருந்து கருவாடு, மீன் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்ற லொறி ஒன்று ஆயுதம் தாங்கிய இருவரினால் வழிமறிக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் மடுவீதிக்கும் முருங்கனுக்கு மிடையில் 3ம் திகதி இடம்பெற்றது.

கடத்தல்காரர்கள் லொறிச் சாரதியையும் கிளீனரையும் கீழே இறக்கிவிட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்கருவாடு என்பனவற்றுடன் லொறியைக்கடத்திச்சென்றுள்ளனர்.

# இடம்பெயர்ந்த அகதிகள் ஆலய மடத்தில் தஞ்சம்

[மாவிட்டபுரம்]

பலாலிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 25 ஆண், பெண் அகதிகள் குப்பிளான் சிவகாமி அம்மன் ஆலயமடத்தில் தங்கியுள்ளனர்.

பலாலி விமான நிலையப் பகுதிக்கு அருகாமையிலுள்ள குருபசிட்டி கல்லுடைக்கும் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்த குடும்பங்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர்.

பதட்டநிலை காரணமாக இடம்பெயர்ந்த இந்த அகதிகளை குப்பிளான் சிவகாமி அம்மன் கோவில் மடத்தில் தங்கியிருக்க ஏற்பாடு செய்து அவர்களுக்கு வேண்டிய உணவளித்து ஆதரிப்பதில் குப்பிளான் லெனின் சனசமூகநிலைய உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தஅகதிகள் 1977ம்ஆண்டு இனக்கலவரத்தின்போது கழுதாவளை, வத்தேகம, ஜடவரவ என்ற சிங்களக் கிராமங்களில் இருந்து இங்குவந்து குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

# அகதிகள் முகாம்களும் அவற்றில் உண்டாகும் நோய்களும்

### டாக்டர் க. வேலாயுதபிள்ளை

(வடகொழும்பு மருத்துவக் கல்லூரி)

அகதிகள் முகாம்களிற் காணப்படும் நோய்கள் நான்கு கட்டத்தில் அமைவது கண்கூடு.

முதற் கட்டத்தில் காயங்கள் முறிவுகள் மன அதிர்ச்சி நோய்களுடன் மக்கள் அகதிகள் முகாம்களுள் உட்புகுகின்றனர். இவர்களுடன் நீண்டகால நோய்களால் ஏற்கனவே பீடிக்கப்பட்டோரும் காணப்படுவர். பின்னைய ரகத்தில் குருதிச் சுற்றோட்டக் குறைபாடுகள், நீண்டகால சுவாசப்பை நோயாளர் (ஆஸ்மா உட்பட) நீரிழிவு நோயாளர் ஆகியோரும் காணப்படுவர். ஒருசில நாட்கள் சென்றதும் தாம் கற்பழிக்கப்பட்டதாயும் அதனால் வரக்கூடிய விளைவிலிருந்து விடுதலைபெற நிவாரணங் கோரி சில பெண்மணிகள் முறைப்பாடு செய்வர்.

இரண்டாம் கட்டத்தில் சன நெருக்கத்தால் ஒருவரின் சுவாசத்திலிருந்து மற்றையோருக்குப் பரிமாறப்பட்ட கிருமிகளால் தொண்டை அரிப்பு, தடிமன், இருமல், காய்ச்சல் முதலிய குணங்கள் சுவாச உறுப்புக்களில் ஏற்படும் நோய்களால் வெளியேறும் இக்கால கட்டத்திலேயே சின்னமுத்து, கொப்பளிப்பான், குக்கல் முதலியன தொற்றுகின்றன. இவை பெரும்பாலும் சிறுவர்களைத் தாக்குகின்றன.

மூன்றும் கட்டம் வரு முன்னர் அகதிகள் வெளியேறின் உசிதம். இரண்டாம் கட்டம் முடிவுற்று மூன்றும் கட்டம் தோன்ற ஒரு முகாம் இரண்டு வாரங்கட்குக் கூடுதலாய் நிலவவேண்டும்.

மூன்றும் கட்டத்தில் காணப்படும் நோய்கள் இரு பிரிவுகளாய் அமைவன முதற் பிரிவில் இரண்டாம் கட்டத்தில் தொற்றி மூன்றுங்கட்டத்தில் விளைவுகள் தோன்றும். சின்னமுத்து, கொப்பளிப்பான். குக்கல் ஆகியன. இரண்டாம் பிரிவில் தோன்றுவது வயிற்றோட்டம், வாந்திபேதி வயிற்றுளைவு, செங்கமாரி, நெருப்புக்காய்ச்சல் ஆகியன. மூன்றுங்கட்ட இரண்டாம் பிரிவு நோய்கள் பேராபத்தை உண்டு பண்ணுவன. வயிற்றோட்டம், வாந்திபேதி, வயிற்றுளைவு ஆகியன மலசல கூட வசதிகள் போதியளவு அமையாமையாலும், சூழலை மலத்தால் மாசு படுத்துவதாலும், இலையான் முதலியவற்றிற்கு உறைவிடமாக குப்பை கூளம் இடப்படுவதாலும், போதிய பாவிப்பிற்கு சுத்த நீர் குன்றியிருப்பதாலும், நன்றாக வேக வைத்த உணவுகள் பரிமாறப்படாமையுமே காரணம்.

இந்நோய்களாற் பெரிதும் பாதிப்பதும் மடிவதும் சிசுக்களேயாகும். இம் மரணங்களைத் தடுப்பதற்கு மலத்தின் மூலம் வெளியேறிய நீரும் இரசாயனப் பொருட்களும் உடலுள் மீளப்பாய்ச்சப்படல்வேண்டும். இவற்றிற்கான கலவை உப்புக்கள் யூனிசெப் நிறுவனத்தால் வழங்கப்படுவதுடன், ஜீவனி என்ற பெயர்களுடன் மருந்து விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

நோய்த் தடைமுறை முற்கூறப்பட்ட காரணங்களை அகற்றுவதுடன், மலசல கூடப் பாவனையின் பின்னரும், உணவு பரிமாறலின் முன்னரும். உணவு உட்கொள்ள முன்னரும் கைகளை சவக்காரம் பாவித்து கழுவுவதினாலும் பெறலாம் எமது சூழலில் சமயாசமய அகதிகள் முகாம்கள் அமைப்பதால் இந்நோய்களை, சுகாதார சேவை நாளாந்தம் செயற்படுவதாலேயே அகற்றமுடியும்.

தடை முறை எவ்வளவு வில்லங்கமானது என்பதை முகாம்களில் அனுபவப்பட்டோரே அறியமுடியும். ஆதலால் முகாம்கள் சன நெருக்கடியுடன் நீடிப்பது உசிதமன்று. நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி முதலியனவற்றிற்கும் முற்கூறியவையே காரணமாக அமைந்தாலும் இவை பெரும்பாலும் வயது கூடியோரையே தாக்குவன. இந்நோய் கண்டோரை முகாம்களிற் பராமரிக்க இயலாது. இவர்களை மருததுவமனைக்கே அனுப்பவேண்டும்.

நான்காம் கட்டத்தில் வரும் நோய் சமூகத்தில் கீழ்நிலை ஏற்பட்டதால் உண்டாகின்றது. இது மேகநோய்கள், குடிவகை போதைவஸ்து முதலியவற்றால் ஏற்படுகின்றது. எத்தகைய தடைமுறைகள் முகாமையாளரால் புகுத்தப்படினும் அவற்றையும் மீறி இவ்வழக்கங்கள் புகுவதைக் காணமுடியும்.

இந்நிலை ஏற்படுவது அகதிகளாக அநேக நாட்கள் தங்குவோர் தமக்கு ஓர் எதிர்கால விடிவு தூரத்திலும் காணமுடியாது எனக் கருதுவதாலே இப்பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தடுப்பது சுலபமன்று

இந்நான்கு கட்டங்களிலும் கருவுற்ற பெண்களைப் பராமரிப்பதும், மகப்பேற்று வசதிகள் செய்வதும், சிசுவுற்ற சேய்களைப் பேணுவதும் முகாம் நடத்துவோரின் பொறுப்பிலுள்ளது.

மனித குலம் அவல நிலையிலிருந்து மீளவேண்டின், நிறத்தால், இனத்தால், மொழியால், மதத்தால், இன்னும் பலவற்றால் வேறுபட்டோர் அனைவரும் வேற்றுமையில் ஒற்றுமை, பன்மையிலும் மனித குலம் என்ற ஒருமை காணப்படல்வேண்டும் மனிதனை மனிதனாக மதிக்கவும், தனிமனித உரிமை பேணவும் மனிதன் பல்லின உறுப்புக்களுள்ளும் தன்னில் காணப்படும் உறுப்புத் தனிமையையும் வேற்றுமையுள் காணப்படும் ஒருமை ஒருவராய்த் திகழ்வதை அவதானிக்கவேண்டும்.

—நன்றி: 'வீரகேசரி'

# உணவுப்பொருட்களுக்கு இந்தப்பகுதியில் தட்டுப்பாடு

(சுன்னாகம்)

மாதகல், பண்டத்தரிப்பு பகுதியில் அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தனியார் கடைகள் உட்பட கூட்டுறவு சங்கக் கிளைக் கடைகளில்கூட அரிசி, மா. சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இல்லை. அரிசி தட்டுப்பாட்டினால் கிலோ 14ரூபா ரை அரிசி விலை என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது.

உணவு முத்திரைகள் மூலம் பொருட்களை பெறுபவர்களுக்கு வழங்குவதற்கே அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்கள் வழங்க முடியாதுள்ளது என்றும், இதற்கு காரணம் பிரதான களஞ்சிய சாலைகளில் பொருட்கள் கையிருப்பில் இல்லாததால் தான் என்று கூட்டுறவுசங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## ரூ. 5 லட்சம் கொள்ளை!

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை ப நோ. கூ சங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளையின் போது 5லட்சத்து 11ஆயிரத்து 937ரூபா72 சதம் கொள்ளை போனதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

ரூபா 4,58,300 சதம் 54ரொக்கப் பணமாகவும், ரூபா43, 637 சதம் 1? பெறுமதியான காசோலைகளும் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதியில் சடலம்

(மன்னார்)

மன்னார்-உயிலங்குளம் பகுதியில் 62 வயதுடைய நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது சடலம் வீதியோரத்தில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இவரது மார்பில் துப்பாக்கியால்சுட்டகாயமும், நெற்றியில் வெட்டுக்காயமும் காணப்பட்டது.

றீகல்
தினசரி 10-30, 2-00
மட்டும்
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
மட்டும்
விஜயகாந் — சசிகலா
நடிக்கும்
பி. எஸ். வீரப்பாவின்
சபாஷ்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
இன்று முதல்
ஜெய்சங்கர், K. R. விஜயா
நடித்த
முகூர்த்த நாள்

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30 P m
GREEN ICE
(Adults)

# தவறிவிழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

"யாழ் நகரில் பதட்டநிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஓடிக்கொண்டிருந்த மினிபஸ்ஸின் புட்போட்லிருந்து விழுந்து மரணமானார்"

கட்டப்பராயைச் சேர்ந்த 2? வயதான பத்மநாதன் பத்மரூபனின் மரணவிசாரணையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

இம்மாதம் 6ம் தேதி, யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டபதட்ட நிலையில், மானிப்பாயிலிருந்து யாழ் நோக்கிவந்த மினிபஸ்ஸில் பயணம்செய்த பத்மரூபன் திடிரெனக்குதித்து மரணமானதாக விசாரணையில் கூறப்பட்டது.

எதிரில்வந்த மினிபஸ்ஸில் இருந்தபயணிகள் யாழ் நகரில் சுடுகிறார்கள் போகவேண்டாம், என்று கூறியதைத் தொடர்ந்து 'புட்போட்டில்' நின்றுபயணம் செய்த அவர் சுதுமலையில் திடீரென்று குதித்ததால், காயமடைந்து பின் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின்பின், விபத்து மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## 'இந்து' கூறுகிறது

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கு அமெரிக்காவில் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது

இதற்கென ஒரு லட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டாலர்களை உதவியாக வழங்கவும் அமெரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இத்தகவலை இந்தியாவிலிருந்து வெளியாகும் 'இந்து' பத்திரிகை வெளியிட்டுள்ளது. (சூ)

## மற்றுமொரு 'மரண தண்டனை'

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு சுடப்பட்டு இறந்து கிடந்தார்.

கட்டப்பட்ட நிலையில் இறந்து கிடந்த இந்த இளைஞர் சுமார் 25 வயது மதிக்கத்தக்கவர்.

இவரது தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. அவருக்குப் பக்கத்தில் கிடந்த அட்டையில் ''தமிழீ போராளிகளை காட்டிக் கொடுப்போருக்கும்' அவர்கள் செல்லும் பாதைகளை காட்டிக்கொடுப்போருக்கும் இதே போன்ற 'மரணதண்டனை' வழங்கப்படும்', என்று எழுதப்பட்டிருந்ததோடு 'தமிழ் ஈழ போராளிகள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## காத்தான்குடியில் காணப்படும் சுவரொட்டி

(மட்டக்களப்பு)

தீவிரவாத இயக்கமொன்றின் பெயர் குறிப்பிடப்பட்ட சுவரொட்டிகள், காத்தான் குடி பகுதியில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளது.

இச்சுவரெட்டிகளில் 4-ந் திகதி காத்தான்குடியில் நடைபெற்ற சம்பவத்தை அடுத்து அப்பாவி தமிழ் முஸ்லிம் மக்களை தாக்கி குழப்பத்தை விளைவிக்க முயல்வோர் தண்டிக்கப்படுவர் என எழுதப்பட்டுள்ளது. (ரா)

## அலுவலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

முருங்கன் உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் 1984 டிசம்பர் மாதத்திலிருந்து தற்காலிகமாக வவனியா அரசினர் பண்ணைக்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# கார் பட்டரிகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்றுக் காலை இனந்தெரியாதவர்களால் கார் பட்டரிகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

வான் ஒன்றில் வந்த இளைஞர்கள் அங்கிருந்த கார் பட்டரிகளை கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது

இக்கொள்ளை சம்பவம் நடந்தபோது அவ்வீதியில் சில நிமிடநேரம் போக்குவரத்து நடைபெறவில்லை என்றும் கூறப்படுகிறது. (க)

# தொழிற் சங்கங்களை அணிதிரட்டியபின் எதிர்ப்புத் தினம்

[யாழ்ப்பாணம்)

''தொழிற்சங்கங்களையும், தொழிலாளர்களையும் அணி திரட்டியபின் எதிர்ப்பு தினம் நடத்துவதென வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு நேற்று முடிவு செய்துள்ளது.

தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் யாழ். அலுவலகத்தில் திரு. எஸ் விஜயானந்தன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் 13 தொழிற் சங்க பிரதிநிதிகளும் வேறு தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டன.

ஒருவாரம் தொழிற்சங்கங்களையும் தொழிலாளர்களையும் அணிதிரட்டுவதென்றும் அதன்பின் எதிர்ப்பு தினத்தை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. (க]

## மகாசிவம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் இடமாற்றம் விடயத்தில் மோசடியாளர்களின் தந்திரங்களில் சிக்கிக்கொள்ள வேண்டாமென எச்சரிக்கை வித்தமைக்காக கல்விச் சேவைக்குழு உறுப்பினர் திரு. க. ஜெயக்குமாருக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. த. மகாசிவம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

தக்க நேரத்தில் விடுவிக்கப்பட்ட ஒரு எச்சரிக்கையென்று திரு. மகாசிவம் திரு. ஜெயக்குமாருக்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

### சுப்பையா சண்முகசுந்தரம்

யாழ்ப்பாணக் கச்சேரி உதவி அரசாங்க அதிபர் சண்முகசுந்தரம் காலமானார். ஈமக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 8, நல்லூர் குறுக்குவீதி,
யாழ்ப்பாணம். (1782)

## மரண அறிவித்தல்

### தம்பியப்பா தவபுத்திரன்

தம்பியப்பா தவபுத்திரன் (கச்சேரி, வவுனியா) 3-2-85ல் அகாலமரணமானார், இவர் கெருடாவில் தம்பியப்பா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், தவமணியின் அன்புக் கணவனும், தவராஜா, ஜமுனா ஆகியோரின் அன்புத் தந்தையும், விவேகானந்தன் (இ போ. ச. வவுனியா), யோகேஸ்வரி, அமிர்தானந்தர் (துறைமுக அதிகாரசபை, கொழும்பு), பேரானந்தமலர், சச்சிதானந்தம் (கல்வயல், பேரானந்தமலர், பாலதயரனந்தம் (சர்வோதயம், வவுனியா) ஆகியோரின் சகோதரனும், நல்லதம்பி (ஜோதி ரெக்ஸ்ரைல்ஸ், வவுனியா), கனகரட்ணம் (ஆசிரியர், மட்டுவில் தெற்கு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் அவரது உற்றார், உறவினர், நண்பர்கள் பங்கு பெறுது நடைபெற்றுள்ளது என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல் தருபவர்:
த. அமிர்தானந்தர்,
வவுனியா.

(1781)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 65ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 2. 389-24126.

## அந்த விமானம்...

1-ம் பக்கம் 2ம்கலத்தொடர்ச்சி

மத்திய அரசு தடுத்து வைத்திருந்தது.

இவ்விமானம் நேற்று பிற்பகல் கட்டுநாயக்கா விமான நிலையத்தை சென்றடைந்தது.

லிஸ்பனிலிருந்து புறப்பட்டுவந்த இந்த விவானம் எரிபொருள் நிரப்புவதற்காக திருவனந்த புரத்தில் தரை இறங்கியபோதே இந்திய அதிகாரிகள் அதனைத் தடுத்து வைத்திருந்தனர்.

இவ்விமானத்தில் ஜோர்டான் நாட்டின் ஆயுதங்கள் இருந்ததாகவும், இதனை பிரிட்டனைச் சேர்ந்த இரு விமானிகளும் பெல்ஜியம், ஸயிர் நாடுகளின் இரு பொறியியல் நிபுணர்களும் ஓட்டிவந்துள்ளனர்.

## பேச்சுவார்த்தை...

(1ம்பக்க 2ம் கலத்தொடர்ச்சி)

த்தை நடத்தியுள்ளேன்'

'இலங்கையின் இனப்பிரச்னைகு அரசியல் தீர்வுகாண உதவக்கூடிய விடயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டது

'இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாணுவதிலுள்ள முட்டுக்கட்டைகள் பற்றியும் எமது பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டது.

'இலங்கையின் இனப்பிரச்னையை அரசியல் ரீதியில் தீர்த்து வைக்கக் கூடியவழி வகைகள் பற்றியும் எமது பேச்சுவார்த்தையின் போது பரிசீலனை செய்யப்பட்டது.

''இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி இலங்கையிலுள்ள சகல மக்களினதும் அபிலாஷைகளை நன்குணர்ந்துள்ளார்.

''ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தியைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்காததினாலேயே, தமது விசேட தூதுவராக புதுடில்லிக்கு என்னை அனுப்பி வைத்தார்.

''இலங்கையின் இனப் பிரச்னை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்த எமது பேச்சுக்கள் வெளிப்படையாகவும் சுமுகமாகவும் அமைந்திருந்தன. இலங்கையின் இனப்பிரச்னை தொடர்பாகப் பாரதத்தின் நிலையை இலங்கை புரிந்து கொண்டுள்ளதாகவும் திரு. ரஜீவ்காந்தியிடம் நான் தெரிவிததேன்.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களின் நிலை குறித்தும் தாம் கவலை கொண்டுள்ளதாக திரு ரஜீவ்காந்தி இப்பேச்சுக்களின் போது என்னிடம் தெரிவித்தார்.

# இளைஞர் ஆண்டுக்காக விரிவான ஏற்பாடுகள்

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்தில் சர்வதேச இளைஞர் ஆண்டை முன்னிட்டு விரிவான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் இதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்துள்ளது. இச்செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இம்மாவட்ட இளைஞர் யுவதிகளின் தேவைகளான கல்வி, பயிற்சி, தொழிற்துறை, வீடு, சுகாதாரம், விளையாட்டு போன்றவற்றையும், சமுதாயத்தில் அவர்களின் பங்களிப்பு, அபிவிருத்தி ஆகியவற்றிலான ஈடுபாட்டையும் குறிக்கோளாகக்கொண்டு இங்கு சர்வதேச இளைஞர் ஆண்டு கொண்டாடப்படுகின்றதென்றும் ஒவ்வொரு மாதமும் இவ்வாண்டு பல்வேறு துறைகளிலும் இளைஞர் வாரம் அனுஷ்டிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## சிங்களவர்களும்..

1-ம்பக்கம் 4ம் கலத்தொடர்ச்சி

செய்தியில் அதற்கு முந்திய சனிக்கிழமை மேற்படி ஒலிபரப்பில் இந்தப் பிரசாரம் நடைபெற்றதாக அப்பத்திரிகையின் ஹாலாவத்த நிருபர் எழுதியுள்ளார். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒலிபரப்பப்படும் இந் நிகழ்ச்சியை தம்பகுதியில் பலர் இப்பொழுது கேட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

## மின்சார...

[1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]

வில் பகுதியில் பெரும்பாலன விவசாயிகள் மின்தடை ஏற்பட்டால் பாதிக்கப்படுவர்கள் என்றும் கூறப்படுகிறது

குளிர்சாதனப் பெட்டியில் கெட்டுப் போகாமல் வைக்கப்பட வேண்டிய சில முக்கிய மருந்து வகைகள் மின்தடை ஏற்படுவதால் பழுதடைந்து விடுமென்றும் இதனால் அவசர நோயாளிகள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

## அண்ணா...

[1-ம்பக்கம்5கலத் தொடர்ச்சி[

உணர்வுகளையும் தமிழக மக்களுக்கு வெகுவிரைவில் எடுத்துக் கூறவுள்ளேன்.

''எனது உடல்நலத்தில் அக்கறை செலுத்தி, உதவிகள் புரிந்த மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும், தற்போதைய பிரதமர் திரு ரஜீவ்காந்திக்கும், எனக்கு சிகிச்சையளித்த டாக்டர்களுக்கும், அமெரிக்கா செல்ல விமானத்தை ஏற்பாடு செய்து தந்த விமான நிறுவனத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கறேன்.''

## நிவாரண உதவிகள்...

[ ம் பக்க 5ம் கலதொடர்ச்சி)

நிவாரண உதவிகளாகும். இவ்வுதவிகள் நாளை செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மீனவக் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும்.

யாழ். அரசஅதிபர் திரு. எம் பஞ்சலிங்கத்தின் வேண்டுகோளின் பேரில் போரூட், றெட்பானா, சர்வோதய ஆகிய சமூகசேவை ஸ்தாபனங்கள் இந்த உதவிகளை வழங்க முன்வந்துள்ளன

இந்த உதவிகளின் மூலம் சுமார் 23 ஆயிரத்து 700 மீனவக் குடும்பங்கள் பயன்பெறும் என்று கருதப்படுகின்றது. இவ்வுதவிகளுக்கு மேலாக துணிவகைகளும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பின்னர் வழங்கப்படவிருப்பதாக போரூட் அபிவிருத்தித் திட்ட ஒருங்கிணைப்பாளரும் நிர்வாகியுமான திரு. சி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

''இலங்கையின் இனப் பிரச்னை குறித்து உயர்மட்ட நிலையில் தொடர்பு கொண்டிருக்க இலங்கையும், இந்தியாவும் இணங்கியுள்ளன.''

## மீண்டும் இயங்குகிறது

(கொழும்புத்துறை)

யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள உப தபால்நிலையம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

## பஸ்விபத்தில்...

[1-ம்பக்க-5ம்கலத்தொடர்ச்சி)

பாதையில் நோட்டன் பிரிஜ் பகுதிக்கருகில் தியகல என்ற இடத்தில் தனியார் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் 6 பேர் பலியாகியுள்ளனர். 20 பேர் காயமுற்றுள்ளனர். பலியானவர்களில் பஸ்சாரதியும் அடங்குவார்.

## மின்சாரசபை...

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

கள் மற்றும் பல பராமரிப்பு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகக்கூறப்படுகிறது.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை அவர்கள் கொண்டு வந்த லொறியில் ஏற்றிச் சென்றனராம்.

## குருநகரில் கொள்ளை

நேறுக்காலை குருநகரிலுள்ள இலங்கை மின்சார சபையின் அரசாங்கக் காரியாலய பராமரிப்பு மின் நிலையத்திலும் பராமரிப்பு மின்பொருட்கள் ஏராளமாக கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அங்கிருந்த இரு ஊழியர்களை எச்சரித்துவிட்டு இக்கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது.

குருநகர் பராமரிப்பு நிலையத்தில் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான மின்பொருட்கள் இருந்ததாக கூறப்படுகிறது. பாதுகாப்புக் கருதி மற்றும் ஸ்ரோர்களிலிருந்த பெறுமதிமிக்க மின்பொருட்கள் குருநகரில் உள்ள நிலையத்தில்தான் வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

## சுன்னாகத்தில் மீண்டும் கொள்ளை

(ஊரெழு)

இலங்கை மின்சாரசபையின் சுன்னாகத்திலுள்ள யாழ் பிரதேச மின்சார மின்பொறியியலாளர் அலுவலகத்தில் மீண்டும் கொள்ளைச் சம்பவம்ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மேற்படிஅலுவலகத்திற்கு வான் ஒன்றில் வந்த சில இளைஞர்கள் அங்கிருந்த காவலாளியையும் கடமையில் இருந்த சில ஊழியர்களையும் பணயம் வைத்து அங்குள்ள களஞ்சிய அறையின் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்து மின்சாரப் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி சுமார் 7 ஆயிரம் ரூபா என்று சொல்லப்படுகிறது.

மேற்படி அலுவலகத்தின் களஞ்சிய அறையில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கொள்ளை இது வென்றும் இந்த அலுவலகத்தில் இது வரையில் ஆறு தடவைகள் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்றும் இங்கு பாவனையில் இருந்த வாகனங்களும் கடத்தப்பட்டிருப்பதாகவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.